**செய்தி வெளியீடு எண்: 26/2022** **நாள்: 31.03.2022**

**பத்திரிக்கை செய்தி**

**விம்கோ நகர் பணிமனை மெட்ரோ இரயில் நிலையத்தில் 30.04.2022 வரை பயணிகள் தங்கள் வாகனங்களை இலவசமாக நிறுத்தி கொள்ளலாம்**

மெட்ரோ இரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஆய்வு மேற்கொண்டு ஒப்புதல் அளித்ததின் பேரில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சமீபத்தில் திருவொற்றியூர் தேரடி மற்றும் விம்கோ நகர் பணிமனை மெட்ரோ இரயில் நிலையங்களை 13.03.2022 அன்று முதல் பயணிகள் பயன்பாட்டிற்காக திறந்தது. மேலும், விம்கோ நகர் பணிமனை மெட்ரோ இரயில் நிலையத்தில் 31.03.2022 வரை பயணிகள் தங்கள் வாகனங்களை நிறுத்தி கொள்வதற்கான கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பயணிகளின் தொடர்ச்சியான ஆதரவிற்கு நன்றி தெரிவிக்கும் வகையில், விம்கோ நகர் பணிமனை மெட்ரோ இரயில் நிலையத்தில் இலவசமாக வாகனம் நிறுத்தும் கால அளவை 30.04.2022 வரை நீட்டித்துள்ளது.

எனவே பயணிகள் விம்கோ நகர் பணிமனை மெட்ரோ இரயில் நிலையத்தில் 30.04.2022 வரை இலவசமாக வாகனம் நிறுத்தும் (இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கரம்) சலுகையை பயன்படுத்தி கொள்ளலாம்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**